செ. வெ. எண்: 280 நாள்: 02.06.2009

பத்திரிகை செய்தி

செய்தி மக்கள் தொடர்புத்துறை

# எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிர்சி நிறுவனம், சென்னை—113

மூன்றாண்டு கால பட்டயப் படிப்புகளுக்கான 2009–2010 ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்பங்கள் விற்பனை மற்றும் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் 08.06.2009 மாலை 5.00 மணி வரை காலக் கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி காமராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பு தொழில் நுட்பத்துடன் தொலைக்காட்சி தயாரிப்பு நுணுக்கத்தையும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. இந்நிறுவனம் இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கீழ் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தில் கீழ்க்கண்ட ஐந்து பட்டயப் படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது.

1) திரைப்பட தொழில் நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (ஒளிப்பதிவு)

2) திரைப்பட தொழில் நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (படம் பதனிடுதல்)

3) திரைப்பட தொழில் நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல்)

4) இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம்

5) படத்தொகுப்பு மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம்

விண்ணப்பங்களைப் பெற தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் அதற்கான சாதிச் சான்றின் ஜெராக்ஸ் நகலுடன் ரூ 30/–க்கும் மற்றவர்கள் ரூ 100/–க்கும் தேசிய

மயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியில் வரைவோலை எடுத்து ரூ 10/–மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட உறையுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

வங்கி வரைவோலை "The Director, Information and Public Relations Department, M.G.R. Government Film and TV Institute, Chennai-113" எனும் பெயரில் பெறப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் பெறுவதற்கும் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் திரும்ப அனுப்புவதற்கும் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், தரமணி, சென்னை–113 எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் விற்பனை மற்றும் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் 08.06.2009 மாலை 5.00 மணி வரை காலக் கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த விவரம் www.tn.gov.in எனும் இணைய தளத்திலும் காணலாம்.

இத்தகவலை செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு சி.காமராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

இயக்குநர் 2/6/09

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9